THIRU K. VINAYAKAM : Sir, whereas experimenting with artificial rain and trying to get rain by this kind of method is mostly a fantastic scheme conceived by some scientists, will this Government advise the Central Government not to waste good money after this bad business ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Most of the experiments of the scientists are always considered by laymen as fantastic but this is not a fantastic experiment. We have not yet reached a stage where we can be certain about it. But at some future date we will certainly be very certain about it.

மருத்துவ தேர்வுகள்.

* 362 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் முதல் புதிய விதியின் கீழ் மருத்துவக் கல்லூரியில் மூன்று முறை தேர்ச்சியடையாத மாணவர்கள் நான்காவது முறையும் தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

(இ) ஹரிஜன மாணவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு கொடுக்க உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியம் : கடைசி முறையாக இந்த விதியைத் தளர்த்தி, நான்காவது தடவை தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விதிமுறைகள் பல்கலைக் கழகத்தால் இயற்றப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் தலையிடுவதற்கு விரும்பவில்லை.

நடமாடும் மருத்துவ மனைகள்

* 363 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நடமாடும் மருத்துவ மனைகள் எங்கெங்கு உள்ளன ?

(இ) இல்லையெனில் அவற்றை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) நடமாடும் மருத்துவ மனைகள், ஆலங்காயம், கூடலூர், உதகமண்டலம், செய்யூர், ஹரூர், ஜயங்கொண்ட சோழபுரம், சங்கரன்கோயில் ராமநாதபுரம், கொடைக்கானல், திண்டுக்கல், ஈரோடு ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். சங்கரய்யா : இந்த நடமாடும் மருத்துவ மனைகளை அரசாங்கம் ஏற்படுத்தும்போது, எந்த அடிப்படையில் அந்தப் பிரதேசங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?